Registered as a News Paper மக்கங்கள் 06

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 26 [ 08 - 02 - 1998 ] திங்கட்கிழமை ஓசை 356

## போதனா வைத்தியசாலை குப்பைத் தொட்டியில் குடல்

யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தில் பல இடங்களில் புதரும் புல்பூண்டுகளும் வளர்ந்து நிற்கக் காணப்படுகின்றன. நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறும் சில வார்ட்டுகளின் பின்புறமாகவே புல்பூண்டுகள் வளர்ந்துள்ளன. வார்ட்டுகளின் முன்பக்கம் சுத்தம் செய்யப்பட்டு செப்பனிடப்பட்டிருக்க பின்புறத்தில் உள்ள புதர்கள் வெட்டி அகற்றப்படாமல் உள்ளன. மேலும் சவம் கொடாதபடி அகற்றப்படும் குடல்கள் சவச்சாலைக்கு அருகில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி, கட்டுவன் தெல்லிப்பழை பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் நேற்று முன்தினம் நள்ளிரவில் பலத்த எறிகணை ஏவப்பட்டது என தெரிய வருகின்றது.

இப்பகுதியில் கடந்த இரு வாரங்களாக தொடர்ந்து எறிகணை ஏவப்படுவதால் மக்கள் பதற்றம் அடைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

# அத்தியாவசிய சேவைகளை சீராக்குக :

# சர்வதேச நிவாரண அமைப்புக்கள் சிறிலங்கா அரசிடம் வற்புறுத்து

(கொழும்பு)

வடபகுதிக்கான அத்தியாவசிய சேவைகளைச் சீராக்குமாறு இலங்கையில் செயற்படும் சர்வதேச நிவாரண அமைப்புக்கள் சிறிலங்கா அரசை வற்புறுத்தியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இது தொடர்பாக இந் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் சிறிலங்கா அரச அதிகாரிகளுடன் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதோடு, மேலும் நடத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

வடபகுதியின் அத்தியாவசிய சேவைகளை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சிறிலங்கா அரசுக்கு பல்வேறு சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் சர்வதேச மட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

வட பகுதியின் சீரற்றிருக்கும் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக சிறிலங்கா அரச அதிகாரிகளுடன் இவ்வாறான சில அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இப்பேச்சுவார்த்தையின் போது மேற்படி பகுதியில் வாழும் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியம் எனக் கருதப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



2 -ம் லெப். வெற்றி (மாயவன்)

முல்லைத்தீவு இராணுவ முகாம் அருகில் தடைகளை அகற்ற வந்த இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் பகல் 1.00 மணியளவில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த 2 ஆம் லெப்டினன்ட் வெற்றி / மாயவன் (சிவபாலசுந்தரம் விஜயராஜ். செல்வா நகர், ஆரையம்பதி மட்டுநகர்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர

## யாழ். குடாக்கடலில் மீனவர் மீது தாக்குதல்

யாழ். குடாக் கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள் மீது கடற்படையினர் மீண்டும் இரவு நேரங்களில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கி உள்ளார்கள்.

கடந்த இரு தினங்களாக கல்முனை, மண்டைதீவுக்கரையோரங்களில் டிஸ்கோ வலை மூலம் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினரும் கல்முனை, மண்டைதீவுக் கரையோரங்களில் உள்ள இராணுவத்தினரும் தொடர்ச்சியான ஷெல் மற்றும் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டார்கள் எனவும் இதன் காரணமாக மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை கடலில் விட்டு விட்டு வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஒரு சில மீனவர்களை காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## பொருளாதார தடையை கண்டித்து சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் அரசின் பொருளாதாரத் தடையினால் ஏற்பட்டுள்ள பட்டினிச் சாவைக் கண்டித்து யாழ் நகரின் பல பகுதிகளிலும் நேற்றுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

''அரச அதிபரே! பட்டினிச் சாவில் நின்று மக்களைக் காப்பாற்று அல்லது பதவி துற'', 'அரசே! ஆயுதத்தினால் வெல்லமுடியாததை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## விவாதத்திற்கு நாள்குறிக்க அரசாங்கம் காலக்கெடு

(கொழும்பு)

பொதுவிவாதத்தில் கலந்து கொள்வதா இல்லையா என்பதை எதிர்க்கட்சி-ன் தீர்மானித்துக்கொள்வதற்கு எதிர்வரும் புதன்கிழமைவரை பிரேமதாசாவினால் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

பொது விவாதத்துக்கு நாம் தயாராக இருக்கிறோம்.

ஆனால் இவ்விவாதத்தின் போது எடுத்துக்கொள்ளப்படும் விடயங்கள் இலங்கையின் எதிர்கால முன்னேற்றத்திற்கான திட்டங்கள் மட்டுமன்றி இலங்கையில் மனித உரிமைகள் பற்றியும அரசினால் ஊக்குவிக்கப்படும் கொலைக்கும்பல் பற்றியும்,

[6 ஆம் பக்கம் பார்க்க)

## இலவசசீருடை விநியோகம் விபரங்கள் அறிவிப்பு

## பர்மாவிலிருந்து புலிகளுக்கு ஆறு கப்பல்களில் ஆயுதங்கள்

### இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

பர்மா ரங்கூன் கடற்பகுதி ... கூறியுள்ளன. ... கப்பட்டிருப்பதாகவும் மேலும்

# இலவச சீருடை விநியோகம் விபரங்கள் அறிவிப்பு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான இலவச சீருடை பின்வரும் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆண்டு 1 தொடக்கம் 5 வரையுள்ள கனிட்ட ஆண் மாணவர்களுக்கு 1 1/4 யார் சேட்டுத்துணியும் 8/4 யார் காற்சட்டைத் துணியும் இது வெள்ளை அல்லது நீலநிறத்தில் வழங்கப்படலாம். கனிட்ட மாணவிகளுக்கு கவுண் துணி 2 யார் வெள்ளை நிறத்தில் வழங்கப்படுகிறது.

ஆண்டு 6 தொடக்கம் 9 வரையுள்ள இடைநிலை வகுப்பில் கற்கும் ஆண் மாணவர்களுக்கு 1½ யார் சேட்டுத் துணியும், 1 யார் காற்சட்டை துணியும் வெள்ளை அல்லது நீலநிறத்தில் வழங்கப்படுகிறது. இடைநிலை மாணவிகளுக்கு வெள்ளை நிறத்தில் 2 யார் கவுண்துணி வழங்கப்படுகிறது.

ஆண்டு 10 தொடக்கம் 13 வரையும் உள்ள சிரேட்ட வகுப்பில் கற்கும் ஆண் மாணவர்களுக்கு 1 3/4 யார் சேட்டுத்துணியும் 2 யார் காற்சட்டைத் துணியும் வழங்கப்படுகிறது இது வெள்ளை நிறத்தில் உள்ளது சிரேட்ட மாணவிகளுக்கு கவுண் துணி வெள்ளை நிறத்தில் 3 யார் வழங்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை ஒரே நாடாக இருக்க இந்தியா விரும்புகிறதாம்

(டில்லி)

"இலங்கை ஒரு நாடாக இருப்பதையே இந்தியா விரும்புகிறது; இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு செய்யும் எந்தக் கொள்கையையும் இந்தியா மேற்கொள்ளாது" இவ்வாறு இந்தியப் பிரதம மந்திரி திரு. பி. வி. நரசிம்ம ராவ் தெரிவித்துள்ளார், பி.பி.சி. உலகசேவை வானொலியும் தொலைக்காட்சியும் ஏற்பாடு செய்திருந்த நேரடித் தொலைபேசித் தொடர்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பல கேள்விகளுக்குப் பதிலளித்தார், இச் சந்தர்ப்பத்தில் இலங்கைத் தீவிரவாதிகளுக்கு ஏன் ஆதரவு வழங்கவில்லை என்று கேட்டபோது திரு நரசிம்மராவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜ். செல்வா நகர், ஆரையம்பதி மட்டுநகர்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## விசாரணைக் குழு நியமிக்கப்படும்

மூதூர் வடகு விபத்துப்பற்றி விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. இதுபற்றி சட்டமா அதிபர் திணைக்களத்தோடும் நீதி உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஹமீத்துடனும் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மூடிக்கிடக்கும் தொழில் நுட்பக் கல்லூரி

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக் கல்லூரி ஒரு மாதகாலமாக மூடிக்கிடக்கின்றது மேற்படி தொழில்நுட்ப இணைப்புக்கல்லூரிகளில் தச்சுத் தொழில், மேசன் தொழில்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுவந்தன. எனினும் இவ்வருட பயிற்சிகள் இன்னும் தொடங்கவில்லை.

இவ்வருடம் இப்பயிற்சிகளை பெற மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 74 இளைஞர்கள் விண்ணப்பித்திருந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

பர்மா ரங்கூன் கடற்பகுதிக்கு ஊடாக ஆறு கப்பல்கள் நிறைந்த ஆயுதங்கள் வடக்கு, கிழக்கு கடற்கரைப் பகுதிகளுக்கு கடத்தி வரப்பட்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

புலிகளுக்குச் சொந்தமான இக் கப்பல்கள் நவீன யுத்த தளபாடங்களுடன் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அதைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

பர்மாவின் காடுகளில் மறைந்திருக்கும் குமரன் என்பவரே இக் கப்பல்களை அனுப்பியதாக மேலும் கூறப்பட்டுள்ளது.

# 'லக்தீப' பத்திரிகைகாரியாலயம் அரசாங்கத்தினால் சீல்வைப்பு

(கொழும்பு)

"லக்தீப" எனும் சிங்களப் பத்திரிகை காரியாலயம் கடந்த வெள்ளியன்று சீல் வைத்து மூடப்பட்டது.

கொழும்பு மாநகரசபைக்கு செலுத்த வேண்டிய வரியை குறித்த கால எல்லையில் செலுத்தாமையே இதற்கு காரணம் என அலுவலக வாசலில் சுவரொட்டி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இச் "சீல்" வைப்பிற்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய முன்னறிவித்தல் எதுவும் கொடுக்கப்படவில்லை என பத்திரிகை நிர்வாகம் தெரிவித்துள்ளது

எது எப்படியிருப்பினும் பத்திரிகை வெளிவந்தே தீரும் என அப்பத்திரிகையின் ஆசிரியர் விளி எத்திகொட தெரிவித்தார். பக்கங்கள் குறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நக்ஸலைட்களின் கோரிக்கைக்கு ஆந்திர அரசு பணிந்தது

(டில்லி)

ஆந்திராவில் வாரங்கல் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டிருக்கும் நக்ஸலைட் தலைவர் சாந்தி ரணதேவை விடுதலை செய்வதற்கு அம்மாநில அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.

பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருக்கின்ற எம்.எல் ஏ பால்ராஜு மற்றும் இதர சில அதிகாரிகளையும் பாதுகாப்புடன் விடுதலை செய்வதற்கு ரணதேவை விடுதலை செய்ய வேண்டும் என்பது கடத்திச் சென்ற நக்ஸலைட்டுக்களின் கோரிக்கையாகும்.

ஆந்திரப் பிரதேச மனித உரிமைகள் சங்கத்தின் தலைவர் கண்ணபிரான் இத் தகவலை வெளியிட்டார்.

## வரி விளம்பரம்

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை; இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்.) (சி-5918)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருட்களும், லேஸ் தையல் பொருட்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருட்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி யாழ்ப்பாணம். (சி-5924)


## வினாடி-வினா போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் கணித்திணைக்களம் யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஆண்டு நான்கு தொடக்கம் ஆண்டுபதினொன்று வரையிலான மாணவர்களிடையே வினாடிவினாப் போட்டி ஒன்றைஏற்பாடு செய்துள்ளது

கணித, விஞ்ஞானஅறிவியல் கட்டுரைப் போட்டியொன்றும் நடைபெறவுள்ளது இப்போட்டி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனித்தனியாக நடைபெறும். [42]

## கட்டி முடிக்கப்பட்டது

நெடுங்கேணிப் பிரதேசத்தில் இருக்கும் இரதிமடுக்குளம் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக உடைப்பெடுத்துள்ளது. எனினும் சுமார் 175 ஏக்கர் வயல் நிலம் பாசனம் பெறும் இக்குளத்தின் உடைப்பை, தமிழீழபொருண்மியமேம்பாட்டுக் கழகத்தின் முல்லை மாவட்ட இணைப்பாளருடன் இணைந்து கிராமிய உற்பத்திக் குழுவினர் தமது சுய முயற்சியினால் கட்டி முடித்துள்ளனர்.

## விளையாட்டு

யாழ் மாவட்ட கரபந்தாட்ட சம்மேளனத்தால் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கி…

## நிர்வாகிகள் தெரிவு

கலைவாணி சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டத்தில் நடப்பு வருடப் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது,

திரு. த கணேசலிங்க தலைவராகவும், திரு. இ குலசேகரம்பிள்ளை செயலாளராகவும், திரு. நா சண்முக வடிவேல் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் ஏழுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

❋ ❋ ❋

[குருநகர்]

தொடர்மாடி சனசமூக நிலையத்தின் 1993ஆம் வருட புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த 2 2 93 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நடத்தப்பட்டு கீழ்க்கண்டோர் தெரிவாகினர்.

தலைவர்: ஆ. செபஸ்ரியன், உபதலைவர்: கொ. ராஜன், செயலாளர்: அ. க. ஏனஸ்ற், உபசெயலாளர்: அ றொபின். பொருளாளர்: கே. றெஜினோல்ட்,

மற்றும் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [21]

❋ ❋ ❋

24-1 93 இல் நடைபெற்ற பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் புதிய இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவராக கா. கார்த்திகேசுவும், உப தலைவராக பெ . தங்கராசாவும் மேலும் ஐந்து உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

❋ ❋ ❋

புத்தூர் லிங்கன் மகதிய சனசமூக நிலையத்தில் இவ்வாண்டு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக திரு. நா. சிவஞானமும், செயலாளராக திரு. சி. சுந்தரமும், பொருளாளராக திரு. சி. குருமரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

❋ ❋ ❋

(நெல்லியடி)

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு திரு. நடராசா தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. பீ. சிவராசாவும், உப தலைவராக திரு வி. விவேகானந்தனும், செயலாளராக திரு இ இருபாகரசூரியனும், பொருளாளராக திரு எஸ். நடராஜ வும் தெரிவு செய்யப்பட்டனர்.

❋ ❋ ❋

(கொடிகாமம்)

கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் 1993ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு…

# கலைஞர்களுக்கான ஒரு கலாமண்டபமாக விளங்கும்

- புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

கலைஞர்களுக்கு ஒரு மண்டபம் இல்லை என்ற குறையை இந்த மண்டபம் பூர்த்தி செய்கின்றது.

இந்த நாட்டில் சண்டைக்கு மத்தியிலும், சங்கீதம் பாடப்படுகின்றது யுத்தத்திற்கு மத்தியிலும் நாட்டியம் ஆடப்படுகின்றது. எனினும் வயிற்றுப் பிழைப்பிற்காக கலையைக் கையாள்பவனே ஒரு கலைஞன் அல்ல என்று விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்'

நல்லூர் சட்டநாதர் வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இளங்கலைஞர் மன்றத்தின் கலா மண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு இடம்பெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய திரு. புதுவை இரத்தினதுரை மேலும் கூறுகையில் கலைஞர்கள் இந்த மண்ணில் நடைபெறுகின்ற விடுதலைப்போராட்டத்தோடு தம்மை இணைத்துக் கொள்ள முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவை வெட்டி சம்பிரதாய பூர்வமாக கலா மண்டபத்தைத் திறந்து வைத்தபின் இடம்பெற்ற விழாவுக்கும் தலைமை வகித்தார். இவ்விழாவில் நல்லை குருமகா சந்நிதானம் சிறிலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், அருட்திரு சவரிமுத்து அடிகளாரும் ஆசியுரை வழங்கினர். யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் துரைராசா, பேராசிரியர் அ சண்முகதாஸ், யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர், கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம், மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம், மற்றும் எஸ் கனகரத்தினம், எஸ். பேரின்பநாதன், சோ. பத்மநாதன், கம்பன்கழக அமைப்பாளர் இ ஜெயராஜ் ஆகியோரும் விழாவில் சிறப்புரை ஆற்றினர். மண்டப நிர்மாணிப்பில் பங்கேற்ற பத்து கலைஞர்களுக்கு இளங்கலைஞர் மன்றத் தலைவர் பொன். சுந்தரலிங்கம் பொன்னாடை போர்த்து கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாலை நிகழ்ச்சிகளுக்கு ந. வீரமணிஐயர் தலைமை வகிக்க யாழ் மாநகர முன்னாள் ஆணையாளர் சி. வி. கே சிவஞானம், யூனிவேர்சல் அதிபர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். அத்துடன் தவில் கச்சேரி, வயலின் இசை, மெல்லிசை மற்றும் வள்ளி திருமணம் என்னும் நாடகமும் அரங்கேற்றப்பட்டன.

புலமைப்பரிசில் பரீட்சை

## சித்தியடைந்த மாணவர்களுக்கு பெப். 15 முன் அனுமதி

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 ஆயிரம் மாணவர்களுக்கும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவர். இவரின் சம்பந்தப்பட்டவர்கள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளலாம் என உயர் கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர்ப் பட்டியல் பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும், அனுமதி பற்றிய கடிதங்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களால் இந்த மாணவர்களுக்கு அறிவிக்கப்படுமெனவும் அவர் சொன்னார்.

யாழ். போதனா வைத்தியசாலையில்

## அடையாளம் காணமுன்பே சடலங்கள் பழுதடைகின்றன

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருக்கும் சவச்சாலையில் பிரேதங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு முடியாத நிலை இருப்பதால் உறவினர்களால் அடையாளம் காண்பதற்கு முன்பே பிரேதங்கள் பழுதடைந்து… …லைக்கான குளிரூட்டி இயந்திரம் நீர் மின்சாரம் தடைப்பட்ட காலம் முதலே இயங்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இளாலி படுகொலைச் சம்பவத்தின்போது கண்டெடுக்கப்பட்ட பிரேதம்…

## ரயில்வே திணைக்கள நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் தெரிவுக்கென கடந்த வருடம் நடத்தப்பட்ட பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட நூற்றிமூன்று பேரில் தமிழர் எவரும் இல்லையெனத் தெரிய வருகின்றது.

அரசாங்கத்தின் இனவிகிதாசார கொள்கை இவ்விடயத்தில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந் நியமனம் குறித்து மீள் பரிசீலனை செய்யவேண்டுமெனவும், கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

### 1993-2-8

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். முரளி (வேலுச்சாமி தெய்வேந்திரமணி - பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை-யாழ்.)

தர்மராஜன்—உதயன் (அருளப்பு சந்தியா பேசுதாஸ் - கடற்கரை வீதி, பருத்தித்துறை - யாழ்.)

போமன்—சேமன் [ஞானப்பிரகாசம் அருள்ஞானதாஸ் - வெளிச்சவீட்டு ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை - யாழ்)

1987 ஆம் ஆண்டு திருமலை - கும்புறுப்பிட்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

பவன் (தியாகராசா சுரேந்திரன் - திருக்கோணமலை)

1988 ஆம் ஆண்டு மன்னார் பேசாலைப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ சுனில (வடிவேல் கந்தசாமி - தங்கநகர், மூதூர் - திருமலை)

அம்பாறை - தம்பிலுவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிற் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

நடேசன் (தம்பிலுவில் - அம்பாறை)

மட்டு - ஏறாவூர் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலிற் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - உடையார்கட்டுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். செல்லன்தம்பி (ஆறுமுகம் மகேந்திரன் - 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - மணலாறு)

யாழ். கொக்குவில் கிழக்குப் பகுதியில் வைத்து இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டுப் பின், பிணமாக வீசப்பட்ட, பிறவுண் வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு வவுனியா - பறநட்டகல் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது நிகழ்ந்த விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

அஜந்தன் (சின்னையா சூரியகுமார் - கல்லாறு, செட்டிகுளம் - வவுனியா)

1992ஆம் ஆண்டு மட்டு - வாழைச்சேனைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

விஜி (பாக்கியராசா விஜயகுமார் - இருப்பத்துறை வீதி, மட்டு.)

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட…

## விளையாட்டு

யாழ் மாவட்ட கரபந்தாட்ட சம்மேளனத்தால் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே சுழற்சி முறையில் நடாத்தப்பட்டு வரும் கரபந்தாட்ட போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று திங்கட்கிழமை பரியோவான் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

தவிர்த்தல் முறையில் இடம்பெறவுள்ள இவ் ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியை எதிர்த்து மட்டுவில் மகா வித்தியாலயமும், பரியோவான் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் ம. ம. வித்தியாலயமும் விளையாடவுள்ளன.

## வீதியில் மரணம்

(வடமராட்சி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற கரணவாய் கிழக்கைச் சேர்ந்த சண்முகம் செல்லையா மயக்கமுற்று விழுந்ததில் மரணமானார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இம்மரணம் சம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு வீ. நடராசா மேற்கொண்ட விசாரணையில் இரத்த அழுத்த நோயினால் ஏற்பட்ட இயற்கை மரணம் என தீர்ப்பு வழங்கினார். (யோ)

(கொடிகாமம்)

கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் 1993ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்வதற்கான கூட்டம் அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் அலுவலகத்தில் தலைவர் திரு சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகசபை உறுப்பினராக 14 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## சல்வினியா தாவரம் அகற்றப்படுகிறது

(மானிப்பாய்)

கன்னாதிட்டி குளம் யாழ். மாநகர சபையினரால் துப்புரவாக்கப்பட்டு வருகின்றது. இக்குளத்தில் 'சல்வீனியா' எனும் படர்கொடித் தாவரம் குளம் முழுவதும் பரவி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தாவரத்தை அகற்றி துப்புரவு செய்வதனால் அப்பகுதியில் பெருமளவில் நுளம்புத் தொல்லை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும்,

இக்குளத்தில் இருந்து அகற்றப்படும் இந்த சல்வீனியா தாவரத்தை யாழ். மாநகர சபையினர் தமது மாநகர சபைக்குட்பட்ட தென்னங் கன்றுகளுக்கு பசளையாக பாவிப்பதன் மூலம் சல்வீனியா தாவரக்கழிவுகள் இல்லாமல் போகின்றன. (07)

பாதுகாப்பாக வைப்பதற்கு முடியாத நிலை இருப்பதால் உறவினர்களால் அடையாளம் காண்பதற்கு முன்பே பிரேதங்கள் பழுதடைந்து விடுவதாகத் தெரியவருகின்றது.

இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. பொது மக்கள் அசௌகரியங்களுக்குள்ளாவதற்கும், அண்மையில் சடலங்கள் மாறிக் கையளிக்கப்பட்டதற்கும் இது தான் காரணமெனவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சவச்சா

வில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இளாலி படுகொலைச் சம்பவத்தின்போது கண்டெடுக்கப்பட்ட பிரேதம் ஒன்று அடையாளம் காணப்படாத நிலையில் சவச்சாலையில் இருந்தபோது அதிலிருந்து துர்நாற்றம் கிளம்பியதாகவும் இதனால் அங்கு கடமையாற்றுவோர் பெரும் பாதிப்புக்குள்ளானதாகவும் கூறப்படுகிறது. பிரேதங்கள் கறுத்தும் உருக்குலைந்தும் போவதால் உறவினர்களால் உடனடியாக அடையாளம் காணமுடியாத நிலையும் உருவாகியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## தங்க நகைகள் எடுத்துவர படையினர் மீண்டும் கெடுபிடி

வட பகுதிக்கு தங்க நகைகள் எடுத்துச் செல்வதில் மீண்டும் கடுமையான கட்டுப்பாடுகளை தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் இருக்கும் இராணுவத்தினர் அமுல்படுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

தாண்டிக்குளம் தடைமுகாமைத் தாண்டி வடபகுதி நோக்கிவரும் எவரும் இரண்டு பவுண் நகையையே தம்முடன் எடுத்துவரவோ அல்லது அணிந்துவரவோ அனுமதிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் ஒன்பது பவுண் தாலிக்கொடி அணிந்து வந்த பெண்மணி ஒருவரும், மூன்றுபவுண் சங்கிலி அணிந்து வந்த இளைஞர் ஒருவரும் தாண்டிக்குளம் தடைமுகாமைக் கடக்க அனுமதி மறுக்கப்பட்டதால் வவுனியாவிற்கு திரும்பிச்சென்றுள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் நகைகளை விற்க முனைபவர்களுடன் தமிழில் பேச்சுக் கொடுக்கும் சிலர் தாண்டிக்குளம் தடைமுகாமிற்கு நகைகளை கொண்டுவந்து தருவதாகக் கூறி ஏமாற்று மோசடி செய்வதாகவும் கூறப்படுகின்றது.

அதிரடித் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

விஜி (பாக்கியராசா விஜயகுமார் - திருப்பத்துறை வீதி, மட்டு.)

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த -

மேகலன்-மாறன் (இராசையா சுரேஷ் - மாறா இலுப்பை, நெடுங்கேணி - மணலாறு)

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

இளந்தேவன்-காசன் (சோணமலை விஜேந்திரன் - மாமூலை, முள்ளியவளை - முல்லை)

யாழ் மருத்துவமனையில், மார்புநோய் காரணமாகச் சிகிச்சை பெற்று வருகையில் எமைப்பிரிந்த -
(தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக அலுவலர்)

கப்டன் கீர்த்தியப்பா — கீர்த்திஐயா
(அன்றூஸ் யோசேப் - 1/561, நல்லூர் வீதி, யாழ்.)

வவுனியா - தடைமுகாம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது அதிர்ச்சியுற்று உயிரிழந்த தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[இ/5954]

யாழ். மாநகர சபையின்

# வீதி அமைப்பு தொழில் நுட்பம் பற்றி மட்டக்களப்பு வியப்பு தெரிவிப்பு

யாழ். மாநகர சபையினால் புதிதாக மேற்கொள்ளப்பட்ட வீதி திருத்தும் முறை பற்றி தமக்கு ஒரு விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மட்டுநகர் ஆணையாளர் யாழ். மாநகரசபை ஆணையாளரைக் கேட்டுக்கொண்டுள்ளார். கடந்த சில மாதங்களாக யாழ். மாநகர சபையினர் வீதி திருத்தவேலையில் ஈடுபடும்போது தாரின் மீது உமியைப்போட்டு அதை ஒழுங்காக அமைத்தமை பற்றிய அறிக்கையையே கேட்கப்பட்டுள்ளது.

''தாரின்மீது உமியைப்பரவி புதிய முறையில் வீதி அமைக்கும் முறையை கேள்விப்பட்டு நான் பூரிப்படைந்துள்ளேன். இதே போன்று வேறு தொழில் நுட்ப முறைகளை நீங்கள் கையாள்வீர்களேயானால் அதுபற்றிய அறிக்கையையும் எனக்கு அனுப்பி வைப்பீர்களா?'' என்று மட்டுநகர் ஆணையாளர் யாழ் மாநகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். (07)

## பயணச் செலவு கொடுப்பனவு கல்வி திணைக்களத்தில் இழுபறி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென்று அண்மையில் யாழ்ப்பாணம் திரும்பிய யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஒருவரின் பிரயாணச் செலவு கொடுப்பனவு விண்ணப்பம் யாழ். கல்வித் திணைக்களக் கணக்காளரினால் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் சுமார் முப்பது நாள்களுக்கு அதிகமாக கொழும்பில் நின்று கடமைக்குத் திரும்பியதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

யாழ் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பரீட்சை காரணமாகக் கொழும்பில் நின்ற சமயம் சம்பந்தப்பட்ட அதிகாரி தனது தரத்திலுள்ள மற்றொரு பிரதிக் கல்விப் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்ட பிரயாணக் கொடுப்பனவு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த விடயம் இப்போது யாழ் கல்விப்பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என அறியப்படுகிறது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புனித பத்திரிசியார் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி இன்று திங்கட்கிழமை பி. ப 2.15 மணிக்கு ஆண்டகை தியோகுப்பிள்ளை விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஒ.எம்.ஐ. மாகாண மேற்றாற்றியாளர் வண. பி.பி பிலிப் அடிகளாரும், கௌரவ விருந்தினராக உடற்கல்விப் பிரதிப் பணிப்பாளர் ரி. அருணகிரிராஜவும் கலந்துகொள்வார்கள்.

## தொழில்துறை மேம்பாட்டுக்கு புதிய நிறுவனம் உதயம்

(யாழ்ப்பாணம்)

பொருண்மிய அபிவிருத்திக்கு தமிழீழத்தில் கிடைக்கக்கூடிய மூலவளங்களைப் பயன்படுத்தி நவீன தொழில் நுட்ப முறைகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியினை மேற்கொள்வென 'தொழில் துறை மேம்பாட்டு நிறுவனம்'' என்கின்ற பெயரில் நிறுவனம் ஒன்று இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் இணைப்பு நிறுவனமாகிய இந் நிறுவனத்தின் நடுவப் பணியகம் (இலக்கம் 230, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்கின்ற முகவரியில்) யாழ் பல்கலைக்கழகத்திற்குமுன்பாக இன்று மாலை 3.00 மணிக்கு திறந்துவைக்கப்பட்டு செயற்படவுள்ளது இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் வருமாறு.

தமிழீழ பொருண்மிய வாழ்க்கை முற்றாக சீர்குலைக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்படும் புனருத்தாரண வேலைகள் பழையவை மீண்டும் புதுப்பிப்பதுடன் மட்டுமல்லாமல் ஒரு நீண்ட கால அபிவிருத்திக்கான புதிய செயற்பாட்டுடன் இணைத்துத் தொழில்துறைக்கான அடித்தளம் ஒன்றை கட்டியெழுப்பும் வகையில் இந்நிறுவனம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்து தொழில் நிறுவனமாக்கல், தரக்கட்டுப்பாடு, உரிமங்களைப் பதிவு செய்தல், தமிழீழத்தின் பொருண்மிய விருத்திக்குத் தேவையான ஆய்வு அபிவிருத்தி தேவைகளை மேற்கொள்ளல். தொழில் பயிற்சி தொழில் நுட்ப முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்கல், மற்றும் நிறுவன உதவிகளைப் பெறல் போன்ற பணிகளில் இந் நிறுவனம் ஈடுபடும்.

பிற நாடுகளில் இருந்து தொழில் நுட்பங்களை பெறல் தொழில் அபிவிருத்திக்குத் தேவையான உள்நாட்டு, வெளிநாட்டுமூல வளங்களைத் தேவையான கட்டமைப்புகள் ஊடாகப் பெற்று ஈடுபடுத்தல் மற்றும் கடன் வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை இந் நிறுவனம்மேற்கொள்ளும்.

மேலும் தொழில் அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டுமானங்களை திட்டமிடு நிறைவேற்றலிலும் இந் நிறுவனம் தனது பணிகளை மேற்கொள்ளும்.

இந் நிறுவனம் விரைவில் தொழில்கரு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொழில் கரு எண்ணங்களைத் திரட்டிப் பதிவு செய்யும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது மேலும் தமிழீழத்தில் உள்ள சகல உற்பத்தி நிறுவனங்களின் விபரங்களையும் திரட்டவுள்ளது.

## நெசவாளர்கள் கைது

மதுரையில் நேற்று முன்தினம் சாலை மறியலில் ஈடுபட முனைந்த சுமார் தொண்ணூறு நெசவாளர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தமது சம்பளத்தில் பன்னிரண்டு சதவிகித உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று கோரியே இவர்கள் மறியல் செய்ய முனைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சேவை நலம் பாராட்டு விழா

(தொல்புரம்)

யா/ தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையில் சேவைநலன் பாராட்டுவிழா கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பாடசாலை அதிபர் திரு வி. ந. ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது

மேற்படிவிழாவில் அண்மையில் ஓய்வுபெற்ற பதில்அதிபர் திருமதி செ. தர்மரத்தினம், இடமாற்றம் பெற்றுச்சென்ற திருமதி அ. தேவானந்தம் ஆகிய ஆசிரியைகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இவ் விழாவிற்கு சுழிபுரம் கொத்தணி அதிபர் திரு. கா. சந்திரபாலா பிரதம விருந்தினராகவும் தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு சி கிரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

## புதிய தலைவர் தெரிவு

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் புதிய தலைவராக திரு. எஸ் வி கணநாதன் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

மேற்படி லீக்கின் செயலாளராக கு. கிளிபேட் அன்ரனிப்பிள்ளையும் தனாதிகாரியாக திரு. பி ஆர். தம்பிநாயகமும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (42)

## சடலம் கண்டெடுப்பு

கழுத்தில் சுருக்கிட்டு அநாதரவான நிலையில் மரத்தில் தொங்கிய ஆணின் சடலம் ஒன்று மருதங்கேணி காட்டில் இருந்து நாகர் கோவில் காவல்துறையினரால் மீட்கப்பட்டது. பின்னர் மருதங்கேணி வடக்கு தாளையடியைச் சேர்ந்த கடற்தொழிலாளி தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் (வயது44) என்பவரது சடலம் இது என அடையாளம் காணப்பட்டது [யோ]

## ஆய்வு வட்டம் அமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரால் ஆய்வு வட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு மாதாந்தம் ஆய்வரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த அமர்வுகளில் துறைசார் நிபுணர்கள் உட்பட அரசாங்க உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டு மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கான அவசிய பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர் இங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அதிகரிப்பு

வடமராட்சிப் பகுதிகளில் நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு இலக்காகி நூற்றுக்கு மேற்பட்டோர் வைத்தி சாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையால் வைத்தியசாலையில் இந்நோய் பிரிவு வாட்டுக்கள் நிறைந்து வழிகின்றன. ஆண், பெண் வாட்டுகளில் படுக்கை கட்டில்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் சிலர் தரையில் படுத்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந் நோய்க்கு சிறுவர் சிறுமிகளே கூடுதலாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர் கூடுதல் நோயினால் பாதிக்கப்படுவோர் யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டும் வருகின்றனர்.

## ஊக்குவிப்புத் தொகை மீண்டும் வழங்க வேண்டும்

[யாழ்ப்பாணம்]

இன்றைய வாழ்க்கைச் செலவை கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்ட ஊக்குவிப்புத் தொகையை மீண்டும் வழங்க வேண்டும் என யாழ் செயலக நலன்புரிச்சங்கம் சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் யாழ் அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பிவைத்துள்ள ஒரு கடிதத்தில் 1991 தை முதல் இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

1987-ம் ஆண்டு முதல் அரச ஊழியர்களுக்கு அவர்கள் பெறும் ஊதியத்தில் 50 வீதத்தை ஊக்குவிப்பு தொகையாக சிறிலங்கா அரசு வழங்கி வந்தது தெரிந்ததே.

இக் கொடுப்பனவு 1990 டிசம்பர் மாதத்துடன் நிறுத்தப்பட்டது இதனைத்தொடர்ந்து வழங்குமாறு கோரிய மேற்படி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## மருந்தின்மையால் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நாய்க்கடிக்கான மருந்தின்மையால் ஒருவர் பலியாகியுள்ளார்

ஏழாலையைச் சேர்ந்த இ. கந்தையா [72] என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் என்று தெரியவருகின்றது.

யு. எஸ் எயிட் நிறுவனம்

## போசாக்கு நிலையை மேம்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்குரிய முயற்சியில் ''யு. எஸ். எயிட்'' நிறுவனம் அதிக அக்கறை செலுத்திவருகிறது.

மேற்படி பகுதிகளில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள், மற்றும் அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளால் மக்களின் போசாக்கு மட்டம் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

இவ்வாறான நிலை தொடர்ந்தும் இப்பகுதிகளில் நிலவினால் இங்குவாழும் மக்களின் போசாக்கு மட்டம் மீள முடியாத ஒரு தாழ்நிலைக்குச் சென்று விடுவதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும் என்று இங்கு செயற்படும் பல அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் கருதுகின்றன.

''யு. எஸ் எயிட்'' நிறுவனம் இவ்வாறான கீழ் மட்ட போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்துள்ளது.

இம் முயற்சியின் ஆரம்ப ஏற்பாடாக மேற்படி பகுதிகளில் தற்போது நிலவும் போசாக்கு நிலை குறித்த சகல விபரங்களும் அடங்கிய பூரண அறிக்கை ஒன்றை மேற்படி நிறுவனம் எதிர்பார்க்கிறது. இவ் அறிக்கையைப் பெற்று பரிசீலனை முடிவுற்றதும் இப்பகுதி மக்களின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கான செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க]

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று மரியாஞ் சேனையைச் சேர்ந்த சுமார் 100க்கு மேற்பட்ட அங்கத்தினர் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

## சிறுவர் பாடசாலை கண்காட்சி நிகழ்வு

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபை சிறுவர் பாடசாலையும், மூளாய் ஆசிரியர் பயிற்சி நிலையமும் இணைந்து நடாத்திய கண்காட்சி வைபவம் நேற்று முன்தினம் நெல்லியடி சிறுவர் பாடசாலையில் மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய பொறுப்பாளர் செல்வி இ இந்துமதி தலைமையில் நடைபெற்றது.

இக்கண்காட்சி வைபவத்தில் கரவெட்டி பிரதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைவர் டாக்டர் இராஜேந்திரன், வடமராட்சி கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன், நெல்லியடி சனசமூக நிலைய ஆலோசகர் திரு சி நற்குணலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணி முதல் மாலை 3.00 மணிவரை நடைபெற்ற கண்காட்சி வைபவத்தில் சிறுவர்களினாலும், பயிற்சி ஆசிரியர்களினாலும் தயார் செய்யப்பட்ட ஆக்கங்கள் பல பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (யோ)

## தீமூட்டிக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

கடனை திருப்பிக்கொடுத்த போதும் வட்டி கேட்டு தகாத வார்த்தையை பிரயோகித்ததனால் மனமுடைந்த குடும்பப் பெண் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டிக் கொண்டுள்ளார்.


தான் பெற்ற கடனை கொடுத்தபோதும் கடன் கொடுத்தவர் வட்டி கேட்டு வீட்டிற்குவந்து தகாத வார்த்தையினால் பேசியதால் மனமுடைந்த திருமதி வி கணேஸ்வரி [32 கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்] இவ்வாறு தீமூட்டி ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இடம் பெயர்ந்தவர்களும் வாக்களிக்க வசதி

தேர்தல் ஆணையாளர் உறுதி

வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களும் மாகாண சபைத் தேர்தல்களில் வாக்களிக்க வசதிசெய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் கூறியுள்ளது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்து நாட்டின் இதர பாகங்களில் வாழும் மக்கள் யாவரும் தேர்தல்களின் போது வாக்களிக்க வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் இதற்காக தேர்தல் சட்டங்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் முஸ்லிம் தூதுக்குழு ஒன்றிடம் தேர்தல் ஆணையாளர் உறுதிபடக்கூறியுள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
### 8-2-93



## லெப்டினன்ட் இளமாறன்
(சூரியகுமார்)
(தேவராசா சதீஷ்தரன்-மருது)

வீரப்பிறப்பு: 14-9-1974 (வல்வெட்டித்துறை)
வீரச்சாவு: 9-1-1993 (மணலாறு)

வடக்கென்றும் கிழக்கென்றும்
கிளை கிளையாய் பிரிப்பதற்கு—சிங்களர்
கிலி கொண்டு நிற்குமிடம் மணலாறு தேசமடா
எமக்கென்று இருக்கும் மண்ணை
அன்னியர்கள் ஆள்வதற்கு ஒருபோதும் அனுமதியோம்
என்று சலிப்பின்றி போர் தொடு தோரில்
நீயும் ஒருவனடா.

உன் வீரமுகம் பார்ப்பதற்கு நாம் கொடுத்துவைத்து பிறக்கவில்லை. என்றாலும் நீ நேசித்த பூமித்தாயே தன் மடிமீது ஏந்தியதில் எம் மனதை தேற்றி உன் துயர் மறந்து வாழ்ந்திடுவோம்.

இங்ஙனம்
—குடும்பத்தினர்

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.
(4232)

### நல்லூர் ப. நோ.கூ. சவில் உணவுப் பொருட்கள் விநியோகம்

நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கம் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் வழங்கப்பட்ட அரிசி, மா, சீனி என்பவற்றை உலர் உணவு அட்டைகளுக்கு விநியோகித்து வருகின்றது நான்கு அங்கத்தவர்களுடைய குடும்பத்திற்கு இரண்டு கிலோ அரிசி, இரண்டு கிலோ மா, அரைக்கிலோ சீனி என்ற அடிப்படையில் விநியோகித்து வருகின்றது.

மேலும் கல்வியங்காடு பகுதியில் உத்தரவுபெற்ற வியாபாரிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் பாவனையாளர்களுக்கு கல்வியங்காடு சந்தையில் அமைக்கப்பட்டுள்ள நல்லூர் ப. நோ. கூ. சங்க விற்பனை நிலையத்தில் வைத்து இன்று முதல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**DAY CLASSES**

விஞ்ஞானப்பிரிவு,
பிரத்தியேக
வகுப்புக்கள்

செவ் - வியாழன்
8.00 மணி - 1 00
மணிவரை

விபரங்களுக்கு:-
நிர்வாகி,
புதிய சயன்ஸ்
சென்ரர்
(சி 5953)

## மன்னார் புதிய ஆயருக்கு திருமறைக்கலாமன்றம் வரவேற்பு

(குருநகர்)
"கண்ணீரும் கம்பலையுமாக வாழ்கின்ற எமது தமிழ் மக்களின் நிலையை அஞ்சா நெஞ்சுடன் அகில உலகமும் அறியச் செய்யும் மனப்பக்குவத்தைக்கொண்ட மன்னார் மறைவட்ட ஆயரை வரவேற்பதில் பேருவகை அடைகிறோம்,

யாழ் திருமறைக்கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் வண. நீ மரியசேவியர் அடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 5 ஆம் திகதி மாலை 6 30 மணிக்கு மன்றம் நடாத்திய வரவேற்புபசாரக் கூட்டத்தில் தலைமை வகித்து பேசுகையில் அவர் அவ்வாறு கூறினார்.

மன்னார் மறை வட்ட புதிய ஆயர் பேரருட் திரு. இராயப்பு யோசேப் ஞானானந்தன் ஆண்டகை பேசுகையில் கூறியதாவது.

"தமிழர் கல்வி, சமயம், கலை ஆகிய மரபைப் பேணி வருபவர்கள். தமிழர்களின் வீரமரபுக் கேற்ப திருமறைக் கலாமன்றம் தற்கால போர்க்காலச் சூழலிலும் வீரத்துடன் இறைவழி கலைப்பணியைச் செய்து வருவது பாராட்டப் படத்தக்கது" என்றார்.

நிகழ்ச்சி இறுதியில் மன்றத் தயாரிப்பான "குண்டலகேசி" இலக்கிய இசை நாடகம் இடம்பெற்றது. [21]

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ். மாவட்டம்
## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மருதனாமடம் ஆகிய பிரிவுகளிலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும், தனிப்பட்ட வகுப்புக்கள், கவின்கலை வகுப்புக்கள், கணனி வகுப்புக்கள், மனையியல் வகுப்புக்கள், தொழில்நுட்ப பயிற்சி வகுப்புக்கள், 10மாணவரை விட குறைவான மாணவரைக் கொண்ட வகுப்புக்கள் ஆகிய அனைத்து வகுப்புக்களும் 10. 2 93இல் இருந்து 19. 2. 93வரை இல. 19 செம்மணி வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் காலை 9.00மணி முதல் மாலை 4 00 மணி வரை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். ஏற்கனவே பதிவு செய்தவை யாவும் மீள்பதிவு செய்து புதிய இலக்கங்களை பெற்றுக் கொள்ளவும். ஆவண செலவு ரூபா 40/- 19. 2 93இற்குப்பின் பதிவு செய்யாத ஒரு நிறுவனமும் இயங்க முடியாது.

வட மராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— பொதுச்செயலாளர் —
(சி-5956)

## ஆத்ம சாந்தி ஒன்றுகூடல்

## மாவீரன் வீமன்

(நாகையா சுப்பிரமணியம்)
[ராசன், மணியம்]

வீரப் பிறப்பு 19-4-1965
மாவீர ஈகம் 24 11-1992



எத்தனை களங்கள் கண்டாய்
எம் மரும் புதல்வா உன்னைப்
பெற்றதால் பெருமையுற்றோம், பிறர்
பேசிடும் போதில் உன்றன்
போர்க்குணம் பொறிக்கக் கேட்டோம்
புத்தூர் சந்தியிலே முதல் வீரம்
காட்டி நின்றாய்
இந்திய இராணுவத்தை இங்கிருந்
தோடவைத்தாய்
செந்தழல் வீரம் பொங்கிட
சீறியே எழுந்து நின்றாய்
ராஜனே வீமா உந்தன
தாகமோ வெல்லுமடா!
இதுவரை மறைந்த தமிழீழ மாவீரர்கள் அனைவருக்கும் எமது வீர அஞ்சலிகள்.

குறிப்பு: இன்று [8- 2- 93] திங்கள் நண்பகல் நடைபெறும் ஒன்று கூடல் நிகழ்ச்சியில் அன்னாரின் பாசமிகு அன்பு உள்ளங்கள் அனைவரையும் பங்கு கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

கிராம்புவில்
சாவகச்சேரி.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
- சீலன் குடும்பத்தினர்
(4239)

### 31ஆம் நாள் நினைவுச் சுடரும்
## அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 10 - 01 - 1929



விண்ணில் 09 - 01 - 1993

சிவபதமடைந்த
## திருமதி முருகுப்பிள்ளை அன்னம்மா

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!

அறிவின் சுடரொளியாய் ஒளிவீசி பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்து மாதமொன்றாகினும் எம் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்திபெற எங்கள் நெஞ்சாரப் பிரார்த்திக்கிறோம்.

எமது தாயாரின் சாவுச்செய்தி அறிந்து இறுதிக் கிரியைகள் நடக்குமட்டும் எமது தோளோடு தோள் நின்று உதவிய அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

இன்று 8-2-93 [திங்கட்கிழமை] நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

| | | |
|---|---|---|
| | தற்போதைய | மக்கள், மருமக்கள். |
| | இருப்பிடம் | பேரப்பிள்ளைகள் |
| தையிட்டி, | சூராவத்தை | ஏழாலை வடக்கு. |
| காங்கேசன்துறை | சுன்னாகம் | ஏழாலை [4226] |

சிந்தனைக்கு

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
- தமிழ்ப்பழமொழி.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 08 - 02 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 080 - 3899 நிர்வாகபீடம் 2083
உ. வெ. எண் - 06

# காலம் கடந்து பிறந்த 'ஞானோதயம்'

சிறிலங்காவின் ஜனநாயகம் பற்றிப் பெருமை பேசிய தென்னிலங்கைப்பத்திரிகைகள், சிறிலங்காவின் ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு விளக்கம் கொடுத்தபத்திரிகைகள் இன்று சிறிலங்கா அரசாங்கம் ஜனநாயக உரிமைகளை மதிக்கவில்லை, கருத்துச் சுதந்திரத்தைக் குழி தோண்டிப்புதைத்துவிட்டது எனக் கூக்குரல் இடத்தொடங்கியுள்ளன.

இக்கூக்குரலானது, இன்று தென்னிலங்கையில் அரசிற்கு எதிரான போக்குடையபத்திரிகைகள், 'சுதந்திரமான செயற்பாட்டைக் கொண்ட பத்திரிகைகள்' என்பனவற்றின் மீது அரசாங்கம் எடுத்துள்ள கடும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தே எழுந்துள்ளது. அரசாங்கத்தின் திட்டத்தின்படி அரசஎதிர்ப்பு போக்குடைய பத்திரிகைகளை நிதி நெருக்கடியில் தள்ளி அவற்றின் செயற்பாட்டை நிறுத்துவது அல்லது அவற்றையும் அரசசார்பு போக்குடைய அல்லது அரச எதிர்ப்பற்ற நிலையில் இயங்க விடுவது என்பதே நோக்கமாகும்.

அதாவது சிறிலங்காவின் 'ஜனநாயக ரீதியான அரசு' கருத்துச் சுதந்திரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இது குறித்தே இன்று தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் பெரிதும் ஆத்திரமும், அச்சமும் அடைந்துள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக கூட்டங்களையும், சத்தியாக்கிரகங்களையும் நடத்துவதற்குத் திட்டமிட்டுமுள்ளனர். இதேவேளை சில பத்திரிகையாளர் அச்சத்தின் காரணமாகத் தமது பதவிகளை இராஜினாமாவும் செய்துள்ளனர்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இவ் 'ஜனநாயக விரோதச் செயலின்' ஆரம்பம் இதுவல்ல. அதன் ஜனநாயக விரோதச்செயல் என்றோ, எப்பொழுதோ ஆரம்பித்துவிட்டது. தமிழருக்கு எதிரான ஜனநாயக விரோத நடவடிக்கையில் இலங்கையில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறுவதற்கு முன்பிருந்தே சிங்கள அரசாங்கங்கள் ஆரம்பித்திருந்தன.

அத்தோடு, இலங்கையில் ஜனநாயகப் பாரம்பரியமென்பது தனியாக ஜனநாயக அமைப்பில் ஓர் அம்சமாக உள்ள தேர்தல் மட்டுமே ஒழிய வேறு ஒன்றும் எப்பொழுதுமே இருந்ததில்லை. இது சிங்கள மக்களுக்குக்கூடக் கிடைக்க வில்லை. இதே

# அயோத்தி சம்பவங்கள் பற்றிய விசாரணையில் மந்தப்போக்கு

**— சி. பி. எம். குற்றச்சாட்டு**

[டில்லி]

அயோத்தியாவின் பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் பற்றிய முழு உண்மைகளையும் கண்டறிவதில் மத்திய அரசு அசமந்தப்போக்குடன் செயற்படுவதாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் மாலையில் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹரிகிஷோர் சிங் சுர்ஜித் மேலும் கூறுகையில், அயோத்தியா பிரச்சினை தொடர்பான எல்லாவிவாதங்களையும் ஒத்திப் போடுமாறு பிரதமர் நரசிம்மராவ் கூறியிருப்பது பற்றியும் கருத்து வெளியிட்டார். இந்தப் பிரச்சினை பற்றி எல்லா இடங்களிலும் விவாதிக்கப்படும் போது இவ்வாறு ஒத்திப்போடுவது எப்படிச்சாத்தியமாகும் என்றுஅவர் வினா எழுப்பினார்.

அத்துடன் காங்கிரஸ் கட்சி உண்மையிலேயே சமய சார்பற்ற போக்கைக் கடைப்பிடிப்பதாக இருந்தால் கேரளாவில் முஸ்லிம் லீக்குடனான கூட்டணி உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# ஆளுநர் ஆற்றிய உரை ஏமாற்றம் தருகிறது

**- வாழப்பாடி ராமமூர்த்தி**

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

மாநிலத்தில் பதினொரு நூற்பாலைகள் மூடப்பட்டுக் கிடப்பதாகவும், அரிசி விலை உயர்வால் ஏழைமக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அரசு ஊழியர்கள், விவசாயிகள், மாணவர்கள் நலன்களைப் பற்றியோ ஆளுநரின் உரையில் குறிப்பிடப்படவில்லை என்று மதுரையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசுகையில் வாழப்பாடி குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி அமைப்பு குறித்த அரசியல் சட்ட திட்டங்களைத் தமிழக அரசு ஏற்கவில்லை என ஆளுநர் தனது உரையில் கூறியிருப்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திக்க அனைத்திந்திய அண்ணா தி.மு.க தயங்குவதால்தான் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் குற்றம் சாட்டினார்.

# இந்தியாவுடன் ஒத்துழைக்க சிங்கப்பூர் விருப்பம்

(டில்லி)

இந்தியாவின் முன்னேற்றப் பாதையில் நீண்டகாலக் கூட்டாளியாக விளங்கவும், தனது முன்னேற்றத்திற்காக இந்தியாவின் ஆட்பல வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் சிங்கப்பூர் விருப்பம் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டிருந்த, சிங்கப்பூரின் தகவல் மற்றும் செய்தித்தொடர்புத்துறை அமைச்சர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது, இந்தியாவைச் சேர்ந்த கலைஞர்கள், ஆசிரியர்கள், எஞ்சினியர்கள், டாக்டர்கள் ஆகியோரை சிங்கப்பூரில் வேலைக்கு அமர்த்துவது தொடர்பாகவும் சிங்கப்பூர் ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

**கடத்தப்பட்டோர் விடுதலை பற்றி**

# நக்சலைட்டுகளுடன் கொய்யூரில் நேரடிப் பேச்சு நடக்கிறது

கடத்தப்பட்ட ஆந்திர மாநில சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் அரச அதிகாரிகளின் விடுதலை தொடர்பாக மக்கள் நலஉரிமைக்கழக ஆந்திரப் பிரதேச தலைவர் கண்ணபிரான் நேற்று முன்தினம் மாலையில் கொய்யூரில் நக்சலைட்டுகளுடன் இரண்டு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்த நேரடிப் பேச்சுகளின் போது ராமண்ணா என்னும் சிறையிலுள்ள தீவிரவாதியின் விடுதலையை நக்சலைட்டுகள் அதிகம் வலியுறுத்தாத போதும், கிராந்தி ரணதேவ் என்பவர் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும் என்று கோரியதாக கண்ணபிரான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிராந்தி ரணதேவ் விடுதலை தொடர்பான ஜாமீன் மனுவொன்றை மாநில அரசு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# ஐ. நா. தூதுவரை சந்திக்க

# தூதுவரகம் மூடப்பட்டது

(டில்லி)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருக்கும் தனது தூதரகத்தை மூடிவிடுவது என்று புதுடில்லிமேற்கொண்ட தீர்மானத்திற்கு இணங்க அத்தூதுவரகத்தில் கடமையாற்றிய சகல உத்தியோகத்தர்களும் நாடு திரும்பியுள்ளனர்.

காபூலில் போட்டிக் குழுக்களிடையே கடுமையான மோதல்கள் கடந்த சில நாட்களாக நடந்து வருவதும், கடந்த செவ்வாயன்று இந்திய தூதுவரகவளாகத்தில் ராக்கெட் குண்டு விழுந்து வெடித்ததில் இந்திய தூதுவரக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

**தமிழக சட்டப் பேரவை**

# அவைத்தலைவர் உத்தரவுக்கு மாக்சிய கம்யூனிஸ்ட் வருத்தம்

சட்டப் பேரவையில் ஆளுநர் உரையின் போது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் படித்த அறிக்கைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பத்திரிகைகளுக்கு வெளியிடக் கூடாதுஎன்று அவைத்தலைவர் இட்ட கட்டளையை மாக்சிய கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியுள்ளது.

அவ்வாறு வெளியிடுவது அவையின்உரிமை மீறியசெயல் என்றுஅவைத் தலைவர்குறிப்பிட்டிருப்பது பத்திரிகைகளை மறைமுகமாக அச்சுறுத்துவதாகும் என அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஆர். உமாநாத் நேற்றுச் சென்னையில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருக்கின்றார்.

ஆளுநர் உரையின் போது பேரவையின் கூட்டத்தை நடத்தும் அதிகாரம் ஆளுநருக்கு மட்டுமே உண்டு என்றும், அவ்வாறு இருக்க உறுப்பினரைப் பலவந்தமாக வெளியேற்றியதும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அறிக்கைகளைப் பிரசுரிக்கக் கூடாது என அவைத்தலைவர் உத்தரவிட்டதும் ஆளுநரின் அதிகாரத்தைப் பறிப்பதாகும் என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் அவையில் நடந்தது தொடர்பாக அவைக்கு வெளியில் அவைத் தலைவர் கட்டளையிடுவது சட்டப் பேரவையை அவமதித்ததாகும் என்றும் உமாநாத் தமது செய்திக்குறிப்பில் கூறியிருக்கிறார்.

# மறியல் செய்ய முயன்ற அ.தி.மு.க வினர் கைது

(சென்னை)

மத்திய அரசு மாநிலங்களுக்கு அளிக்கும் அரிசியின் வழங்கு விலையைக் குறைக்கவும், உர விலையைக் குறைக்கவும் கோரி நேற்று முன்தினம் கோவையில் புகையிரதம் முன்பால் மறியல் செய்ய முற்பட்டதாக கூறி அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் 500 கழகத் தொண்டர்களும் கைதாகினர்.

சட்டப் பேரவை உறுப்பினர்களான கே. பி. ராஜு, சிங்கை கோவிந்தராஜன், செல்வி சுலோசனா, பழனிச்சாமி, மணிவாசகம், வி.பி. சந்திரசேகர் ஆகியோர் தலைமையில் கோவை புகையிரத நிலையத்தில் சென்னைசெல்ல இருந்த கோவை எக்ஸ்பிரஸ் முன்பாக மறியல் செய்த போது கைதுசெய்யப்பட்டார்கள். மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

**போதைப்பொருள் கடத்தல் தடுக்க**

# பாகிஸ்தான் அரசு மீது அமெரிக்கா நிர்ப்பந்தம்

[வாஷிங்டன்]

போதைப் பொருள்கள் கட

ளது.

மேலும் பாகிஸ்தான் அர

ஒன்றும் எப்பொழுதுமே இருந்ததில்லை. இது சிங்கள மக்களுக்குக்கூடக் கிடைக்கவில்லை. இதே வேளை 1970-ம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் தேர்தல் ஜனநாயகமும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கவில்லை.

ஆனால், ஆரம்பத்தில் தமிழருக்கு எதிராக ஜனநாயகப் பாரம்பரியங்கள் மீறப்பட்டபோது தென்னிலங்கைப் பத்திரிகைகள் எவையும் அவற்றைக்கண்டு கொள்ளவில்லை. ஆனால் தமிழர் ஜனநாயகரீதியாக தமது உரிமையை பாதுகாக்க முடியாதநிலையில் ஆயுதம்தாங்கியபோது அதனை 'பயங்கரவாதம்' என வர்ணித்தன. அத்தோடு தமிழருக்கு எதிரான அரச பயங்கரவாதத்திற்கு ஊதுகுழல்களாகவும், ஊக்குவிப்பாளர்களாகவும் ஆயின. இதேவேளை, ஜே. வி. பியை அரசாங்கத்தின் சட்டபூர்வமற்ற கொலைகாரக்கும்பல்கள் கொன்று குவித்தபோதும் இவை மௌனம் சாதித்தன. அவற்றையும் ஜனநாயகப் பாரம்பரியமாக ஏற்றுக்கொண்டன என்றேசொல்லலாம்.

இறுதியாக அரசாங்கம் தம்மீது திரும்பியபோதே இப்பத்திரிகைகள் கருத்துச் சுதந்திரம் என்றும், ஜனநாயக விரோத நடவடிக்கை என்றும் கூக்குரல் இடத்தொடங்கியுள்ளன. ஆனால், இது காலம் தாழ்த்திய ஒன்று என்றே சொல்லலாம். அதாவது இப்பத்திரிகை கடந்த காலத்தில் விட்ட தவறுகளுக்கு இன்று தண்டனை அனுபவிக்கின்றன என்று கூறினும் தவறில்லை.

## ஐ. நா. தூதுவரை சந்திக்க பாலஸ்தீனியர்கள் மறுப்பு

(டெல்அவிவ்)

இஸ்ரேல் அரசு கொடுத்த புதிய திட்டத்தின் யோசனைகளுடன் சென்ற தூதுவர் ஒருவரைச் சந்திக்க மறுத்து நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர்கள் திருப்பி அனுப்பிவிட்டனர்.

நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர்களின் சார்பில் பேசிய ஒருவர் இஸ்ரேல் அரசு முன் வைத்துள்ள புதிய திட்டம் ஐ. நா. பொருளாதாரத் தடை விதிப்பதிலிருந்து தப்பும் ஒரு தந்திரோபாயமே எனவும் வர்ணித்தார்.

இந்தப் புதிய திட்டத்தில் நூற்றியொரு பாலஸ்தீனியர் கள் முதலில் நாடு திரும்புவதற்கும், ஏனையோரை, ஆண்டு இறுதிப் பகுதியில் நாடுதிரும்புவதற்கும் இஸ்ரேல் இணக்கம் தெரிவித்தது தெரிந்ததே. இவ்வாறு நாடுதிரும்பக் கூடிய நூற்றியொரு பாலஸ்தீனியர்களின் பட்டியலுடன் இத் தூதுவர் பாலஸ்தீனியர்களை சந்திக்க சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக் - குவைத் எல்லை ரோந்து பணிக்கு ஐ.நா.படை

- பாதுகாப்புச் சபை தீர்மானம்

[ஜெனீவா]

ஈராக்-குவைத் எல்லைப் பிரதேசத்தில் ரோந்துப் பணி புரிவதற்கும் கண்காணிப்பதற்கும், எந்த வகையான ஊடுருவல்களையும் எதிர்த்து முறியடிப்பதற்கும் எழுநூற்றைம்பது பேரைக்கொண்ட படையையும் ஆதரவுப் பணியாளர்களையும் அனுப்புவதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை ஒப்புதல் அளித்துள்ளது.

எல்லைப்பகுதியில் ஊடுருவல் எதுவும் நிகழ்ந்தால் படைபலத்தைப் பயன்படுத்துவதற்கும் படையினருக்கு அனுமதி அளிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை ஒருமனதாக வாக்களித்துள்ளது.

[வாஷிங்டன்]

போதைப் பொருள்கள் கடத்தலுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட இருபது பாகிஸ்தானியர்களை நாடுகடத்தும்படி அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் போதைப் பொருள் கடத்தலை தடுக்கும் வகையில் உறுதியான நடவடிக்கைகளை இல்லாமாபாத் அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் வாஷிங்டன் வற்புறுத்தியுள்ளது.

மேலும் பாகிஸ்தான் அரசின் உயர்பீடத்தில் இருப்பவர்கள் சிலர் போதைப் பொருள் கடத்தலுடன் நேரடியாக தொடர்பு பட்டிருப்பதால் இஸ்லாமாபாத் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என வாஷிங்டன் குற்றம் சுமத்தியுள்ளது.

## ஜேர்மன் விமானம் மீது சேபியப் படைகள் சூடு

சமாதான முயற்சியை பாதிக்குமாம்

பொஸ்னியத் தலைநகர் சரயேவோவிற்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச் சென்ற விமானம் தாக்கப்பட்டமையால் அமைதிக்கான முயற்சியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்டரீஸ் பூட்டரீஸ் காலி கூறியுள்ளார். அத்துடன் இச்சம்பவத்திற்கு பின்னர் ஐ. நா. வின் நிவாரணப் பணிக்கான சேவையும் இடைநிறுத்தப்பட்டுவிட்டதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் யூகோஸ்லாவியாவின் சரயேவோ நகருக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச் சென்ற ஜேர்மனியின் போக்குவரத்து விமானமே செர்பியப் படைகளால் தாக்கப்பட்டுள்ளது, இத் தாக்குதலின் மூலம் விமானம் பலத்த சேதமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது, அத்துடன் விமானப் பணியாளர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

# வெயிலில் நிறுத்தி வைத்து கயிற்றினால் தாக்கினர்

## கடற்படையிடம் அகப்பட்ட மீனவர் தெரிவிப்பு

(வடமராட்சி)

இரண்டு மணிநேரமாக சிறிலங்கா கடற்படையினர் எனது கால்களையும் கைகளையும் கட்டிப்போட்டு தமது படகுகளில் வெயிலில் நிறுத்திவைத்து கம்பாலும் கயிற்றினாலும் மாறி மாறி அடித்துத் துன்புறுத்தினர்.

இவ்வாறு சிறிலங்கா கடற்படையினரிடம் சிக்கி பலத்த காயங்களுடன் விடுவிக்கப்பட்ட கோரியடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஞானப்பிரகாசநவம் (வயது 27) தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று பகல் ஒருமணியளவில் மணற்காடு கடற்பரப்பில் நடைபெற்றது. அவர் மேலும் தெரிவிக்கும்போது நானும் மற்றும் இராசாதுரைராசா(வயது 28) தேவராசா மோகன்(வயது22) ஆகியோருமாக மணற்காடு கடல் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் எம்மை நோக்கி வந்த கடற்படையினர் எமது படகை நெருங்கியதும் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனால் அச்சமடைந்த நாங்கள் கடலில் குதித்தோம். கடற்படையினரின் படகு எம்மைச் சுற்றியவாறு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. செய்வதறியாத நாங்கள் மீண்டும் எமது படகில் ஏறி கைகளை உயர்த்தியவாறு நின்று பயத்தினால் அலறினோம் அப்போது எம்மை தமது படகுக்கு இட்டு வருமாறு கடற்படையினர் கையசைத்தனர்.

மூவரும் அவர்களிடம் சென்றதும் முதலில் இராசாதுரைராசா என்பவரை படகில் ஏற்றிவிட்டு அருகிலே கடலில் படுக்கவைக்கப்பட்டிருந்த வலையை இழுக்குமாறு எம்மிருவரையும் கடற்படையினர் பணித்தனர் அப்போது இருவரால் இழுக்க முடியாது இன்னும் ஒருவரின் உதவி வேண்டும் என்று நான் கூறினேன் பாஷை புரியாத படையினர் என்னை படகில் ஏற்றி கைகளையும், கால்களையும் கட்டி வைத்து மூன்று அதிகாரிகள் தாக்கினர். எனது தலைமயிரைப் பிடித்து தமது படகுடன் மோதியபோது நான் ஒருகணம் மூர்ச்சையுற்று மயக்க நிலையடைந்தேன்.

முதலில்படகில்ஏற்றியவரை இறக்கிவிட்டு வலையை இழுக்குமாறு பணித்தனர். அவர்களாலும் வலையை இழுக்க முடியாது போகவே வலையை கத்தியால் வெட்டிவிடுமாறு கடற்படையினர் தெரிவித்ததிற்கிணங்க மற்றையவர்கள் வலையை வெட்டிவிட்டனர், பின்னர் அந்த இரண்டு மீனவர்களையும் படகில் ஏற்றி தேவராசா மோகன் என்பவரை பலமாகத் தாக்கினர்.

"நாங்கள் கடற்படை முகாமில் எடுத்து வருகின்ற துப்பாக்கி ரவைகள், பீரங்கி குண்டுகள் பயன்படுத்தாமல் அப்படியே முகாமுக்கு எடுத்துச் செல்வோமேயானால் நாங்கள் அதிகாரிகளினால் தண்டிக்கப்படுவோம் ஆகவே இதனை உங்கள் மீது தான் நாங்கள் பிரயோகிக்க வேண்டும்" என்று படையினர் கூறிவிட்டு மீண்டும் சப்பாத்துக்கால்களால் எனது உடம்பின் பல பாகங்களிலும் பலமாகத் தாக்கிவிட்டு கரைக்குப் போகுமாறு பணித்தனர். நாங்கள் கரையை நோக்கி விரைந்து வந்தபோதிலும் மீண்டும் எம்மை நோக்கி ஏவப்பட்ட துப்பாக்கி ரவைகள் எமக்கருகே விழுந்தன. நாங்கள் மயிரிழையில் உயிர் பிழைத்தோம் என்றார்.

(யோ)

## தையல் பொருள் கண்காட்சி

சாவகச்சேரி அறவழிப் போராட்டக்குழுவினரால் நாவற்குழி வனிதா குடியிருப்பிலுள்ள மகளிருக்குத் தையல் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதன் நிறைவு நாளையொட்டி எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் தையல் பொருள் கண்காட்சியும், விற்பனையும் நடத்தப்படவுள்ளது. 13ஆம் திகதி அன்று திறப்புவிழாவும் கண்காட்சியும், 14ஆம் திகதி அன்று கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளதாக இம்முகாம் பொறுப்பாளர் திரு. தேவன் அவர்கள் கூறினார்.

## கலந்துரையாடல்

தென்மராட்சி கிழக்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமப் பகுதி பணிப்பாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு சங்கப்பணிமனையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினரால் நடாத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பேராலயத்தில்

## மன்னார் ஆயருக்கு சிறப்பான வரவேற்பு

"மன்னார் மறைவட்டத்தில் 85 சதவீத மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்கின்றனர். ஐயாயிரம் மாணவர்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறை மற்றும் பாடசாலைகள் இல்லாமை காரணமாக மரங்களின் கீழே கூடி ஏதோ கொஞ்சம் கல்வியைக் கற்றுச்செல்லும் நிலை நிகழ்கிறது.

இவ்வாறு நேற்று மாலை யாழ் பேராலயத்தில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் நன்றியுரையாற்றிய மன்னார் மறைவட்ட ஆயர் பேரருட் திரு இராயப்பு யோசேப் ஞானானந்தன் கூறினார்.

மாலை 4.30 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்திலிருந்து பேராலயத்திற்கு குருக்கள் - ஆயர்கள் புடைசூழ அழைத்துச் செல்லப்பட்ட மன்னார் ஆயர், யாழ் ஆயர், முன்னாள் ஆயர்களுடன் இணைந்து கூட்டுத் திருப்பலியை நடத்தினார்.

மாலை 6 மணியளவில் மங்கள வாத்தியங்கள் சகிதம் வெளிவராந்தாவிற்குக் கூட்டிவரப்பட்ட மன்னார் ஆயருக்கு யாழ் மறைவட்ட பங்கு மக்கள் சார்பில் பிரதிநிதிகள் மலர்மாலை சூட்டினர்.

அதனைத்தொடர்ந்து யாழ். கன்னியர்மடம் பாடசாலை மாணவிகள் வரவேற்புப் பாபாடினர்.

யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. முன்னாள் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசியுரை நிகழ்த்தினார்.

குருக்கள் சார்பில் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் எ.ஐ. பேணாட், துறவிகள் சார்பில் அருட் சகோதரி கொஸ்கா யுவாகின், பொது நிலையினர் சார்பில் எ.எஸ் அல்போன்ஸ் ஆகியோர் வரவேற்புரை வழங்கினர்.

யாழ் திருமறைக் கலாமன்றம் வழங்கிய "சிறை மீட்ட இறை" அபிநயநாடகம் இடம்பெற்றது. பேராலயப் பங்குத்தந்தை வண. ஹில்லறி ஜெபநேசன் அடிகள் நன்றி கூறினார். [17] [21] [88]

லகதீப

வாக வேணும் ஏனைய இடங்களில் அச்சிட்டு பத்திரிகை வெளியிடப்படும் எனவும் இது பத்திரிகைகள் மீது பிரேமதாசா அரசு மேற்கொண்டு வரும் கெடுபிடியின் உச்சகட்டம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கம்

முடிக்

னர். இதேவேளை இன்று

# பாதையோரக் கிடங்குகளில் கண்ணிவெடிகள் உள்ளன

## வலி வடக்கு பற்றி பி.பி.சி. செய்தியாளர்

[கொழும்பு]

மக்கள் நெரிசலாக வாழ்ந்த பகுதிகள் இன்று காடாகிவிட்டன. உடைந்த கட்டடங்களும், இடிந்து பாழடைந்த ஆலயங்களும் வெறிச்சோடிய கிராமங்களாகக் காங்கேசன் துறை, தெல்லிப்பழை, இளவாலை, மாதகல் பகுதிகளும் காணப்படுகின்றன.

இவ்வாறு பி.பி.சியின் கொழும்புச் செய்தியாளர் சுவாகாநோஸ் தெரிவித்தார்.

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 பேர் விடுதலை செய்யப்படுவதைப் பார்வையிட இவர் பலாலிக்கு அழைத்துவரப்பட்டபோது இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்ட இப்பகுதிகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டார். அப்போது தான் பார்த்தவற்றை அவர் விபரித்தார்.

அவர் மேலும் "இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஈ.பி.டி.பியினர் பாதை காட்டினர். பாதையோரங்களில் உள்ள கிடங்குகளில் கண்ணிவெடிகள் இருப்பதை அவதானிக்கமுடிந்தது இந்துக்களின் புனித பூமியான கீரிமலை வெறிச்சோடிப்போய் இருந்தது. இப்பகுதிக்கு மக்கள் வந்து எவ்வாறு வாழப் போகிறார்கள் என்ற ஏக்கம் ஏற்பட்டது" எனத் தெரிவித்தார்.

# ராவ் - ஜெயலலிதா கூட்டணி பற்றி முடிவெடுப்பர்

(சென்னை)

தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் - அனைத்து இந்திய அண்ணா தி.மு. கழகம் ஆகியவற்றின் கூட்டணி குறித்து முதல்வர் செல்வி ஜெயலலிதாவும், பிரதமர் பி.வி நரசிம்மராவும் முடிவெடுப்பார்கள் என்று மூன்று தமிழக அமைச்சர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டணி குறித்து வேறு எவரும் பேசத் தேவையில்லை என்றும் அமைச்சர்கள் எஸ் கண்ணப்பன், அழகு திருநாவுக்கரசு, செங்கோட்டையன் ஆகியோர் கூறியிருக்கின்றனர்.

நேற்று மதுரையில் செய்தியாளரிடம் பேசிய இவர்கள், தேர்தல் சமீபத்தில் நடைபெறப் போவதில்லை என்றும் இடைத் தேர்தலைப் பொறுத்த வரையில் இரண்டு கட்சியின் தலைவர்களும் கூட்டணி குறித்து முடிவெடுப்பார்கள் என்றும் கூறியுள்ளனர்.

# காஷ்மீரில் இராணுவம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

## 2 இராணுவம் பலி

(டில்லி)

காஷ்மீரைத் தனிநாடாக்க கோரி போராடும் முஸ்லிம் போராளிகள் இந்திய பாகிஸ்தான் எல்லையில் கடந்த சனிக்கிழமை இந்திய இராணுவத்தினர் மீது நடாத்திய தாக்குதலில் இரு இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து இந்திய காஷ்மீர் எல்லையில் சுமார் 790 கிலோமீற்றர் தூரத்திற்கு இராணுவத்தினர் உஷார்படுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொருளாதார

அமிசியினால்வெல்லமுடியுமா? 'சர்வதேச சமூகமே! பட்டினியால் மக்கள் மடிவது உனக்குத் தெரியாதா?', 'குழந்தைகளின் [illegible] கப்பலிலா?', 'பழுதடைந்த உணவைப் பாவனைக்கு வழங்காதே!', 'அரச அதிகாரிகளே! பட்டினியால்மக்கள்சாவது உங்களுக்கு வேடிக்கையா?' என்ற வாசகங்கள் அடங்கியசுவரொட்டிகளே நேற்று நகரில் காணப்பட்டன.

அரச அதிபர் செயலகம்,

சர்வதேச

படும் பல அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் நீண்ட காலமாக பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் குறிப்பாக யாழ். குடாநாட்டில் வாழும் மக்களுக்கு இவ்வாறான பல அத்தியாவசிய சேவைகள் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன, அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும், மேற்படி நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரசுக்கு எடுத்துக் கூறியதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

ஏற்கனவே அரசுடன் பல தடவைகள் மேற்படிநிறுவனங்களின் பிரதிநிதிகள் பேச்சு

# மரண அறிவித்தல்கள்

## லலிதாஸ்வர நாதபூபதி P. S. ஆறுமுகம்பிள்ளை

அகில இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் புகழ்பெற்ற பிரபல நாதஸ்வர வித்துவான் லலிதாஸ்வர நாதபூபதி P S. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் இராசநாயகியின் அன்புக் கணவரும், சரஸ்வதி, புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம், முருகதாஸ், கமலாம்பிகை, ஞானபண்டிதன், சிவகுமார், காலஞ்சென்ற நாகநந்தினி, சாமிநாதன், நீலவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதராசா, தவராசா, சீதாதேவி, காயத்திரி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், பவானி, சதீஸ்குமார், கலாஸ்கர், அஜந்தன், ரேகா, சிவாசினி, முரளி, துளசி, ஜெகப்பிரியன், தெஜாயினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 8-2-93 திங்கட்கிழமை (இன்று) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

உரும்பராய். [4240]

# திருமதி இராமலிங்கம் சிவபாக்கியம்

பெரியமாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இராமலிங்கம் சிவபாக்கியம் 06 - 02 - 1993 இல் காலமானார். இவர் திரு. த இராமலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் திரு. இ. கலாதேவன் (ஓய்வு பெற்ற உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்), திருமதி க இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. செ சுப்பிரமணியம் (அதிபர் மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), திருமதி க அனுசா ஆகியோரின் அன்பு மாமியாரும், கீதா, பணிவண்ணன், தீபனா, மைத்திரேயி, மித்திராயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் திரு வே. சிவசம்பு திருமதி வ. சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 07-02-1993 பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியமாவடி, தகவல்:
சாவகச்சேரி. [சி 5957] த இராமலிங்கம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இலவச

இத்தகைய முறையில் வழங்கப்படவேண்டும் என கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றறிக்கை 23/92 மூலம் கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. கே. ஐ. விக்கிரமசிங்க சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். [17]

## யோதனா

உள்ள குப்பைத் தொட்டி ஒன்றில் போடப்படுவதால் சுற்றாடலில் துர்நாற்றம் வீசுகிறது. இத்துடன் வைத்தியசாலையின் நடுவில் முடிவு பெறாத நிலையில் பல வருடங்களாக உள்ள பெரிய கட்டடம் ஒன்றில் உள்ள சுமார் ஆறு அடி ஆழமுள்ள இரு இடங்களில் தேங்கிநிற்கும் நீரில் நுளம்புக் குடம்பிகள் காணப்படுகின்றன. இதனால் இரவில் நுளம்புத் தொல்லை தாங்க முடியவில்லை என்று நோயாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. சில வாட்டுகளின் முன்னால் வடிகால்களிலும் கழிவு நீர் தேங்கி நிற்கின்றது.

மாண்டமான எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடைபெற உள்ளதாக தெரியவருகிறது.

## விவாதத்திற்கு

வாழ்க்கைச் செலாவணி வீதம் பற்றியும் விவாதத்தில் பேச இடம்தர வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்கின்றார். இலங்கை தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் எதிர்கால முன்னேற்றத் திட்டங்கள் பற்றிய கருத்துக்கள் ஒரு சிறிய விடயமே என்று எதிர்க்கட்சியினர் கருதுகின்றனர். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இந்த வேண்டுகோளை திரு பிரேமதாசா நிராகரித்துள்ளார். தொடர்பில்லாத மேற்படி விடயங்களைப்பற்றிப்பேசுவதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் விவாதத்தில் இருந்து நழுவிவிடப் பார்க்கிறார் என்று திரு. பிரேமதாசா கூறியுள்ளார்.

இவ்வாறு இரு கட்சிகளும் எடுத்துள்ள எதிரும் புதிருமான முடிவுகளை வைத்துப் பார்த்தால் பொதுவிவாதம் நடைபெறாது போகலாம் போல் தெரிகிறது என பி.பி. சி. தெரிவித்தது.

இடங்களில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டியிருக்கக் காணப்பட்டன.

பேச்சுக்கள் நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [க]

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**07-02-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8226

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-5560, 26-5113, 28-5294, 24-336, 22-5622,
24-4261, 40 5216, 28 0427, 27-7081, 24-4917,
22-2850, 42-2355, 28-7560, 42-9326, 27-9305,
26-8430, 24 9938, 42-1750, 24-9416, 41-9255,
42-9112, 26-7546, 27-3927, 26 6077, 24-422,
48 4255, 42 3329, 22 7271, 24 7628, 42-1325,
42-2829, 24-4707, 22-3887, 41-9995.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26 7627, 28-4367, 27-6887, 26-4510, 41-8432,
26-6320, 26-2108, 41 9663, 26-4450, 40-4760,
27 9756, 27-7419, 24 9758, 42-3615, 42-1182,
24-6168, 28-7261, 28 6179, 27 9719, 22-9005,
41-6685, 26-2786, 27-8515, 27-8164, 22-4862,
26-3518, 26-2414, 26-1735.